**செ. கு. எண்: 105** **நாள்: 26.04.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.4.2013

திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு வட்டம், ரெட்டியார்பாளையம் கிராமத்தில் 20.4.2013 அன்று அறுந்து கிடந்த மின்சார வயரை மிதித்ததால் திருமதி மாரியம்மாள் மற்றும் அவருடைய மகன் திரு. வேடியப்பன் ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திருமதி மாரியம்மாள் மற்றும் அவருடைய மகன் வேடியப்பன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாரியம்மாள் மற்றும் அவருடைய மகன் வேடியப்பன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**